## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாக 5 ஆம் தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

# பிரமாணங்கள்

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

1.0 **அறிமுகம்**

1.1 இப் பரீட்சை "பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக 5ஆம்தர மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை" என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.2 அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும் மேலும், சிறந்த வசதிகளைக் கொண்டிருக்கின்ற தேசிய பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இப்பரீட்சையிலே கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

1.3 இப்பிரமாணங்கள் 1995 இலும் அதன் பின்னரும் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

1.4 **இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையுடைய மாணவர்கள் உள்ள சகல பாடசாலைகளின் அதிபர்களும் இப் பிரமாணங்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுதல் வேண்டும்.**

1.5 இப் பரீட்சை தொடர்பாக அறிய விரும்பும் பெற்றோர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் இப்பிரமாணங்கள் கொடுக்கப்படல் வேண்டும். தேவைப்பட்டால், பிரமாணங்கள் அவர்களுக்குத் தெளிவாக விளக்கப்படல் வேண்டும்.

1.6 இப்பரீட்சையின் பிரகாரம் உதவிப் பணம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படும் மாணவர்கள் இப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை நிறைவேற்றுவதை நீங்கள் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

2.0 **நோக்கங்கள்**

2.1 ரூபா 180,000.00 அல்லது அதற்கும் குறைந்த வருடாந்த வருமானத்தையுடைய பெற்றோர்களின்/சட்டரீதியான பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கு உதவிப் பணத்தை வழங்குதல்

2.2 தெரிவு செய்த பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் நோக்கத்துடன் இப்பரீட்சை 5 ஆம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படுகிறது. இப்பரீட்சையிலே சித்திகள் ஏதும் தீர்மானிக்கப்படமாட்டாது.

3.0 **தகைமைகள்**

3.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், இலங்கையராக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பத்தை அனுப்பும் சமயத்திலே அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். அவ்வாறாயினும் 2.1 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் உதவிப்பணம் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடையவர் 2023 ஜனவரி 31 ஆம் தினத்தில் 11 வயதுக்கு குறைந்த அல்லது 10 வயதுடைய அல்லது 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மட்டுமேயாகும்.

4.0 **உதவிப் பணம் வழங்குதல்**

பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற விரும்பினால் மேலே 3.0 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் வருடத்துக்கு ரூபா 180,000.00 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும். அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "சமுர்த்தி" வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்த மொத்த வருமானம் தொடர்பாக உங்களால் பிரதேச செயலாளருக்கு வருமானம் கூடவோ குறைவோ எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டு மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களுக்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்தப்பட வேண்டும். பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை. **பெற்றோரின் அல்லது சட்டரீதியான பாதுகாவலரின் வருமானத்தைப் பிழையின்றிக் குறிப்பிடுதல் பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.**